காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை



நன்றி: 'தினத்தந்தி'

9-11-69

விலை 20 காசு

புனித நீராடி புத்தாடை உடுத்தி
இருக்கும் இந் நன்னாளில்
எல்லோருக்கும் எங்களது உளங்கனிந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 9—11—69 | இதழ் 17

கலைஞருக்கே பெருமை!

கடந்த கிழமை, கடலூரில் நடைபெற்ற ஒரு பாராட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள், இந்த நாட்டின்மீதும், மக்கள் நல்வாழ்வின் மீதும் அக்கறை கொண்டோர் அனைவரது சிந்தனைக்கும் சில சீரிய கருத்துக்களைத் தந்திருக்கிறார்,

> காங்கிரஸ் கட்சியில் இன்று ஏற்பட்டிருக்கிற நெருக்கடி தீர ஒரே வழி, மத்திய அரசில் குவிந்து கிடக்கின்ற அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்துத் தருவதுதான்

என்று தெரிவித்திருக்கும் கருத்து துணைக் கண்டத்து மக்கள் மட்டுமே யல்லாமல், அந்த மக்களை வழி நடத்திச் செல்லும் எல்லா தரப்பட்ட தலைவர்களும், எல்லா வகைப்பட்ட மாநில, மத்திய அரசும்கூட சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டிய அரிய கருத்தாகும்.

காங்கிரசுக் கட்சி, தான் ஈட்டிவைத்திருக்கும் பிடினையும் பெருமையினையும் மீட்டுக்கொள்ள வேண்டுமானால் அது நீண்ட நெடுங்காலத்துக்கு உயிரோடிருக்க வேண்டும்; உயிரோடு இருப்பது மட்டுமல்ல—உரிய வகையில் செயலாற்றும் ஆற்றலோடு இயங்கும் தன்மையில் உயிரோடிருக்க வேண்டும். அது உயிரோடு இருப்பதற்குரிய அரிய உபாயத்தைத்தான் கலைஞர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள், தான் தெரிவித்திருக்கும் கருத்தை, ஒரு முதலமைச்சர் என்ற முறையில் மட்டுமேயல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும் கூறி இருப்பதாக, அவரே தெரிவித்திருப்பது இன்னும் - விசேஷ கவனத்துக் குரியதாகும்,

ஆதிக்க அதிகாரம் யாருக்கு? என்ற முறையில் தொடங்கிய காங்கிரசின் பூசல்கள், ஆதிக்கம் கட்சிக்கா? அரசுக்கா என்று தொடங்கி—சில பேர் அரசுக்குத்தான் என்றும், சிலர் கட்சிக்குத்தான் என்றும் கூறிச் செயல்படத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆட்சியிலிருப்போரின் நிலையை வைத்து அவர்களது கூற்றுக்கான காரணங்களை உணர முடியும். குவிந்திருக்கிற அதிகாரங்களை வைத்துக்கொண்டு குபேரத்துவ வாழ்க்கை வாழ முடியும் என்பதோடல்லாமல், மாற்றார் தலைவணங்கத்தக்க நிலையிலும் பெருமையோடிருக்க முடியும் என்ற காரணத்தாலும் ஆட்சியிலிருப்போர், தமக்கே ஆதிக்கம் வேண்டும் என்று துடிக்கத் தொடங்குகின்றனர். அவர்களை ஆட்சிக்கு அனுப்பிவைத்த கட்சியோ, அவர்களது ஆதிக்கப் போக்கை அனுமதிக்க மனமற்றதாவதுடன் அவர்களை அடக்கிவைத்துத் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் நினைத்துவிடுகிறது. அப்போதுதான், தான் பெருமையுடன் மாற்றார் தலைவணங்கத்தக்கவாறு வாழ முடியும் என்றும் முடிவுக்கு வந்துவிடுகிறது!

ஆட்சியினரும், கட்சியினரும் 'ஆதிக்கம்' காரணமாகவே இந்த நிலைக்கு உந்தப்படும்போது, அந்த "ஆதிக்கமே இல்லையென்றால்" இப்போது நடைபெற்றுக்கொண்டு வரும் 'உந்தல்'கள் மட்டுப்படுவதுடன் "யார் பெரியவர்" என்ற விரும்பத்தகாத ஆராய்ச்சியும் அமிழ்ந்து போய்விடக்கூடும்.

அத்துடன், அந்த "ஆதிக்கத்தை" மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிடுவதன் மூலம் பெற்ற அதிகாரத்தின் துணைகொண்டு, மாநில அரசுகளும் தன் மக்களுக்கு நல்ல வகையில் செயலாற்றும் சுதந்திர மார்க்கமும் சித்திக்கிறது.

எனவேதான் காங்கிரசுக் கட்சியின் இப்போதைய நெருக்கடி தீர தமிழக முதலமைச்சர் நல்ல 'மருந்து' தந்திருக்கிறார்.

ஏற்கெனவே, மாநிலங்களுக்கு 'அதிக அதிகாரம்' என்ற குரல் பலமாநிலங்களிலும் வலுப்பட்டுக்கொண்டு வருகிற வேளை இது. எனவே இதுபற்றிச் சிந்திக்கவும், சீரிய வகையில் செயலாற்றும் தக்க தருணம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தருணத்திலேயே இதனைச் செய்துவிட்டால் சிக்கல்கள் தானாகவே தீர்ந்து போகும் என்று கலைஞர் அவர்கள் கருத்தறிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் இதனைத் தொடர்ந்து—

> எதிர்காலத்தில் மத்திய அரசு ஒன்று இருக்குமா என்றே ஐயுறுகிறேன்; ஏனென்றால், வருங்காலத்தில் மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெறும்; எதிர்காலத்தில் மாநிலங்கள் சுயாட்சியைப் பெறும்;
>
> மத்திய அரசு என்பது மாநிலங்களை ஒன்று சேர்த்துவைக்கிற நூலாகத்தான் இருக்குமே தவிர, அதிகாரம் செலுத்துகின்ற கோலாக இராது என்று நம்புகிறேன்.

என்றும் கருத்தறிவித்திருக்கிறார்கள். முதலமைச்சரது இந்தக் கருத்து 1972க்குப் பிறகு நிச்சயம் செயல் உருப்பெறத்தான் போகிறது. காங்கிரசுக்கட்சி சுதந்திர வரலாறு படைத்த பெருமையைக் கொண்டிருப்பதே போதும் என்று கருதிவிடாமல், மாநில மக்களையும் சுதந்திரமாக வாழவிட்ட பெருமையினையும் கொண்டிருக்கவேண்டும்.

அந்தப் பெருமையை அது பெறவேண்டுமானால் கழகத் தலைவர் என்ற முறையில் அவர் கூறி இருக்கிற கருத்துக்களின் பக்கம் "அடிதடியிலிறங்கி இருப்போர்" கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும்.

மறுத்துவிட்டார்கள் என்றால் காங்கிரஸ் கலம் கவிழ்வதைத் தடுக்கமுடியாதது மட்டுமல்ல—வருங்கால வரலாறு, கலைஞரது கருத்துக்கள் செயல்பட்ட விந்தையை வியந்து அந்தப் பெருமையினை கலைஞருக்குப் படைத்து விடுவதைப் பெருமையாய்க் கருதிவிடும்!

★

[2]

நடனராணி, பதுமா என்ற பரத்தையின் வளர்ப்புப் பெண், வனப்பும், வளம்பெற்ற மனமும், இசைத் திறனும், நாட்டியக் கலைத்திறனும் ஒருங்கே பெற்றவள். மன்னன் மனமகிழவும், மற்றோர் கொண்டாடவும், 'மாதவியோ' என்று கலைவல்லோர் போற்றவும் வாழ்ந்துவந்தாள். அவளது அரிய குணம், அந்தப் புரத்துக்கு எட்டி, அம்மங்கையின் கருணைக் கண்கள் நடனராணிமீது செல்லும்படிச்செய்தன. நடனராணி அம்மங்கையின் ஆருயிர்த் தோழியானாள். பதுமா தன் வளர்ப்புப் பெண்ணின் மனப்பாங்கு, பரத்தையராக இருக்க இடந்தராததையும், பல கலை கற்று வாழவே பாவை விரும்புவதையும் அம்மங்கையிடம் கூற, "அதுவே முறை! இனி நடனராணியின் உறைவிடம் நமது அரண்மனையே" என்று கூறி, அவளைத் தன்னுடன் இருக்கச் செய்தாள். நடனராணியை வீரமணி நெடுநாட்களாகவே நேசித்து வந்தான். அவள் அரண்மனைக்கு வந்து சேர்ந்த பிறகு, அடிக்கடிச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கண்கள் பேசின; கனிந்தது காதல், கண்டவர் "சரியே" என்றனர். கேட்டவர் "முறையே" என்றனர். நடனராணியின் நற்குணம் நாடெங்கும் தெரியும். வீரமணியின் திறமும் வேந்தரும் மாந்தரும் அறிவர். "ஆற்றலும் அழகும் ஆரத்தழுவலே முறை" என்று ஆன்றோர் கூறினர். வீரமணியின் தாய் மட்டுமே "பரத்தையரிலேதானா என் பாலனுக்குப் பாவை கிடைத்தாள்? குன்றெடுக்கும் தோளான் என் மகன், குறுநில மன்னன் மகள் அவனுக்குக் கிடைக்காளோ?" என்று கவலையுற்றாள் ஆனால், வீரமணி, நடனராணியிடம் கண்ட கவர்ச்சியை அவனன்றே அறிவான்!

இருண்டு சுருண்ட கூந்தல், பிறைநுதல், சிலைப் புருவம் நெஞ்சைச் சூறையாடும் சுழற் கண்கள், அரும்பு போன்ற இதழ், முத்துப் பற்கள், பிடி இடை இவை கண்டு, கரும்பு ரசமெனும் அவள் மொழிச் சுவை உண்டு, கண்படைத்தோருக்குக் காட்சியென விளங்கும் நடன நேர்த்தியைக் கண்டு, மையல் கொண்ட வீரமணி நடனராணியிடம் நெருங்கிப் பழகியதும் சீரிய குணத்தின் பெட்டகமாகவும் இருப்பதையும், கருத்து ஒருமித்திருப்பதையும் கண்டு, களிகொண்டு, "அவளையன்றிப் பிறிதோர் மாதைக் கனவிலுங் கருதேன்" என்று கூறிவிட்டான். மணவினையை முடித்துக் கொள்ளாததற்குக் காரணம், தாய் காட்டிய தயக்கமல்ல! தாய் தனயனுக்குக் குறுநில மன்னனின் மகள் தேடிட எண்ணினாள். தனயனோ, கோமளவல்லிக்கு மணவினைப் பரிசாக வழங்க குறுநிலம் தேடினான். அதற்காகக் கொற்றவனிடம் தான் கற்ற வித்தையத்தனையும் காட்டிச் சேவை புரிந்துவந்தான். நடனராணியின் வாழ்க்கை நல்வழியிலே அமைய இருப்பது கண்டு, களித்து, பதுமா நிம்மதியாகவே நீங்காத் துயிலுற்றாள்.

பூங்காவிலே நடனராணி புதிதாகச் சேடியாக அமர்ந்த ஓர் ஆரியக் கன்னியிடம், தமிழர் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறிக்கொண்டிருந்தாள். கங்கைக் கரையிலே தனது இனத்தவர் கனல்மூட்ட ஓமத்தீ மூட்டுவதை ஆரியக் கன்னிஉரைத்திட, நடனராணி "எம்மவரின் ஓமம் எதிரியின் படை வீட்டைக் கொளுத்தும்வகையில் கிளம்பும்" என்றுரைத்து மகிழ்ந்தாள்.

"சகல கலை வல்லவளே! பேச்சு போதும், பந்தாடுவோம் இனி" என்று அம்மங்கை கூறி, பாவை

யர் பந்தாடலாயினர். உற்சாகமற்றிருந்த நடனராணியின் உள்ளத்தையும் பந்தாட்டம் குளிரச் செய்தது. கைவளைகள் 'கலீல் கலீல்' என ஒலிக்க, காற் சிலம்புகள் கீதமிட, கூந்தல் சரிய, சூடிய பூ உதிர, மகரக் குழை யாடூட்டமாட, இடை திண்டாட, 'மன முந்தியதோ, விழி முந்தியதோ, கரம் முந்தியதோ' என்று கண்டோர் அதிசயிக்கும் விதமாக, பாவையர் பந்தடித்துக் களித்தனர். பூங்கொடிகள் துவளத் தொடங்கின. வியர்வை அரும்பினது கண்ட மன்னன் மகள் "பந்தாடினது போதுமடி, இனி வேறோர் விளையாட்டுக் கூறுங்கள். ஓடாமல் அலுக்காமலிருக்க வேண்டும்'' என்றுரைத்திட, நடனராணி "பண் அமைப்போமா?'' என்று கூற, ஆரிய மங்கை "பதம் அமைப்போம்'' என்று கூற 'சரி' என இசைந்தனர். ஒருவர் ஒரு பதத்தைக் கூற அதன் ஓசைக் கேற்பவும் தொடர்பு இருக்கவுமான பதத்தை மற்றவர் இசையுடன் உடனே அமைத்திட வேண்டுமென்பது அவ்விளையாட்டு. சிந்தனைக்கே வேலை. சேயிழையார் சுனையில் துள்ளும் மீன்போல், சோலையில் தாவும் புள்ளி மான்போல் தாவாமல் குதிக்காமல் விளையாட வழி இதுவே.

அம்மங்கை துவக்கினாள், பதம் அமைக்கும் விளையாட்டினை. நடனராணியும் ஆரிய மங்கை கங்காபாலாவும் அதிலே கலந்துக் கொண்டனர். மற்றையத் தோழியர் வியந்தனர்.

அம்மங்கை : நாட்டி
நடனராணி; இணைவிழி காட்டி
கங்கா : இளையரை வாட்டி
அம்மங்கை : மனமயல் மூட்டி
நடனராணி: இசைகூட்டி
கங்கா: விரகமூட்டி

இதைக் கேட்டதும் நடனராணி 'வீரமூட்டி' என்று கூறுவதே சாலச் சிறந்தது என்றாள். "விரகம் விசாரம்'' அது வேண்டாமடி கங்கா. அது நடனவுக்கு நோயூட்டும்; 'வேறு கூறு' என்று அம்மங்கை கேலி செய்தாள். "எனக்கொன்றுமில்லையம்மா, ஆகட்டும் கங்கா, நீ துவங்கிடு இப்போது'' என்றாள் நடனம்.

கங்கா: சரசமொழி பேசி
அம்மங்கை: வளை அணி கை வீதி
நடனம்: வந்தாள் மகராசி!

என்றுகூறி, கங்காபாலாவைச் சுட்டிக்காட்டி சிரித்தாள்.

"நீங்கள் இருவருமே பதம் அமையுங்கள். நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். பார்க்கலாம் உங்கள் சமர்த்தை!'' என்று அம்மங்கை கூறினதால், ஆரிய மங்கையும் ஆடலழகியும் பதமமைக்கலாயினர்.

நடனம்: மாலையிலே
கங்கா: மலர்ச்சோலையிலே
நடனம்: மாங்குயில் கூவிடும்போதினிலே
கங்கா: மதிநிறைவதனி!
நடனம்: இதழ்தரு பதனி
கங்கா: பருகிடவரு குமரன்
நடனம்: குறுநகையலங்காரன்
கங்கா: குண்டல மசைந்தாட
நடனம்: கோமளம் விரைந்தோட
கங்கா: மயில்கள் ஆட
நடனம்: மகிழ்ந்த நாடா

"சரியான மொழி! நடனத்தின் நிலை இதுதான் இப்போது'' என்று அரச குமாரி கேலி செய்தாள்.

"கடைசியில்என்னைக்கேலிசெய்யத்தானா தேவி இந்த விளையாட்டு?'' என்றாள் நடனராணி "கேலியல்லவே இது'' என்று கூறிக் கன்னத்தைக் கிள்ளி காவலன் குமரி "மற்றொன்று ஆரம்பி பாலா'' என்று பணித்தாள்.

கங்கா: பூங்காவில் பார் அரும்பு
நடனம்: பூவையருக்கே அது கரும்பு
கங்கா: மனமில்லையேல் வேம்பு

என்று கூறினாள். தன்னை மீண்டும் கேலி செய்வதைத் தெரிந்துகொண்ட நடனம். "பாய்ந்து வருகுதே பாம்பு'' என்று கூறினாள். பாம்பு என்றதும் கங்காபாலா பயந்து 'எங்கே? எங்கே?' என்று அலறினாள். நடனம் சிரித்துக்கொண்டே, "பதத்திலே பாம்பு, நிசத்தில் அல்ல'' என்றுகூறிக் கேலி செய்தாள். எல்லோரும் கைகொட்டி நகைத்தனர். கங்காபாலா வெட்கித் தலைகுனிந்தாள். அதேசமயம்

சென்ற இதழில்......!

நாட்டியக் கலைக்கே அரசியாக விளங்கிய நடனராணி, சோழன் குலோத்துங்க மன்னனது ஒரே மகளான அம்மங்கைத் தேவியின் உயிர்த்தோழி. அரசரின் முழு அபிமானத்துக்கும் உரிய படைவீரன் வீரமணி, நடனராணியின் கண் அசைவில், இடைநெளிவில், அங்கத்துடிப்பில் அகிலத்தையே மறந்துகிடக்கிறான்.

காதலர்கள் தங்கள் களியாட்டத்துக்காக அரண்மனைப் பூந்தோட்டத்தையே பயன் படுத்திக்கொண்டனர். தோட்டக் காவல்காரனோ, தோட்டத்தைக் காப்பதைவிட, அவர்கள் ஆட்டத்தைக் காக்கும் பாதுகாப்புவேலியாக மாறிவிட்டிருக்கிறான்.

இளவரசி அம்மங்கைத்தேவி அரண்மனைத் தோட்டத்தில் ஆடிப்பாடி குதூகளித்துக்கொண்டிருக்கும்போது நடனராணியின் கள்ளத்தனத்தைக் கண்டுபிடித்துவிடுகிறாள் நடனராணி கேலிக்கு ஆளாகிறாள்.

வீரமணி, தான் மன்னருடன் வேட்டையாடச் செல்லவேண்டியிருப்பதுபற்றித் தன் காதலியிடம் கூறி பிரியமுடியாமல் பிரிகிறான். இரவே வந்து விடுவதாகக்கூறி.

வேட்டைக்குச் சென்ற வேந்தன், உறையூரைவிட்டு, காஞ்சிக்குச் செல்லப் பணிக்கிறான் தன் வருகையை முன்னறிவிப்புக் கொடுக்குமாறு வீரமணிக்கு உத்தி விடுகிறான்.

தன் காதலிக்காகவே வேட்டையின்போது பிடித்துவைத்திருந்த ஒரு பஞ்சவர்ணக் கிளியை, செவிட்டு வீரனிடம் கொடுத்து காதலியிடம் சேர்ப்பிக்கக் கூறுகிறான். சரியாகக் காதில் விழாததால் மீண்டும் யாரிடம்? என்கிறான். நான் காதலிக்கும் அம் மங்கையை அறியாயோ? என்கிறான் வீரமணி. அம் மங்கை, என்பதனை தவறாக அம்மங்கைத் தேவி என்றெண்ணிக்கொண்டு தலையசைக்கிறான் செவிடன்.

மன்னர் பட்டத்தரசியையும் கச்சிக்குவரப் பணித்து. அந்தச் செவிடனையே அனுப்புகிறார். வீரமணி கச்சி புறப்படுகிறான். செவிட்டு மருதன் உறையூருக்குப் புறப்படுகிறான். நடனராணியின் மனம், வேட்டையாடச்சென்ற வீரமணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வீரமணியோ, புரவியேறிப் போய்க்கொண்டிருந்தாலும், உள்ளத்தை மட்டும் உறையூருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறான். காதலர்கள் என்றால் அப்படித்தானே!

அறிவு வளர்ச்சி
நாடக மன்றத்தார்
அளிக்கும்

'முல்லைச்சரம்'

கதை-வசனம்
S. இராமலிங்கம், M.A.C.D.I.

'தியாக ஒளி'

கதை-வசனம்
K. R. ரங்கராஜ்

ஆகிய இரு நாடகங்கள் எங்கள் கைவசம் உள்ளது அவற்றை வேண்டுபவர்கள் கீழ் கண்ட விலாசத்திற்கு தொடர்புகொள்க.

அறிவு வளர்ச்சி
நாடக மன்றம்,
அண்ணு தெரு, காஞ்சிபுரம்-3

'கணீர் கணீர்' என்று அந்தப்புரத்து மணி அடிக்கப் பட்டது. 'ஏன்? என்ன விசேஷம்? மணி அடித்த காரணம் என்ன? என்று கூறிக்கொண்டே பாவையர் அந்தப்புரத்தை நோக்கி ஓடினர்.

அம்மங்கையும், நடனராணியும் அரண்மனைக்குள் சென்றனர். குலோத்துங்கச் சோழனின்தேவி, **தியாகவல்லி** அவர்களை எதிர்கொண்டழைத்து, "மங்கா! மன்னர் காஞ்சீபுரம் போகிருராம். என்னையும் வரச்சொன்ஞர். காலையில் புறப்படுகிறேன். நீயும் வருகிருயோ?" என்று கேட்க, "நான் வரவில்லையம்மா" என்று அம்மங்கை கூறிவிட்டாள், செய்தி கொண்டுவந்த மருதன், அம்மங்கையை வணங்கிவிட்டு, "தேவி! இதோ இந்தப் பஞ்சவர்ணக் கிளியை வீரமணி தங்களிடம் தரச்சொன்ஞர்" என்றுகூறிக் கிளியைத் தர, அம்மங்கை ஆச்சரியப்பட்டு, நடனராணியை நோக்கியபடி, "கேட்டாயோ நடனம், வீரமணி கிளியை எனக்குத் தரச் சொன்ஞுமே' என்று கூறிட, நடனம் "நாட்டிலேயும் காட்டிலேயும் கிடைக்கும் எந்த உயர்தரப் பொருளும் தங்களுக்குக் குடிபடைகள் தரக்கடமைப் பட்டிருக்கிருர்கள்" என்று கூறிஞள். ஆஞல், நடனராணிக்குக் கொஞ்சம் மனக் கஷ்டந்தான். இதைத் தெரிந்துகொண்டாள் ஆரியப்பெண் கங்காபாலா! ஆகவே, இருவரிடையேயும் விரோதத்தை மூட்டிவிட வழி கிடைத்துவிட்டது என்று எண்ணிக் களித்தாள். நடனராணி இருக்கும் வரை, அரண்மனையிலே தனக்குச் சரியான செல்வாக்குக் கிடைக்காது என்று கங்காபாலா கருதிஞள்.

அம்மங்கையிடம் தனக்குச் செல்வாக்கு ஏற்பட்டுவிட்டால், ஆரிய குலத்துக்கே சோழ மண்டலத்திலே உத்தியோகம் உயர் ஸ்தானம் கிடைக்கும்படிச்செய்ய முடியுமல்லவா! பஞ்சவர்ணக்கிளியுடன் அம்மங்கை படுக்கையறை சென்று, தங்கக் கூண்டிலே கிளியைவிட்டு, வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கையில், நடனராணியிடம், பாலா "நடனம்! என்னடி பரிசு வேறு யாருக்கோ விழுந்துவிட்டது போலிருக்கிறதே. உனக்கல்லவா கிளியை அவர் அனுப்பியிருக்க வேண்டும், எதற்காக அரசகுமாரிக்கு அனுப்பிஞர்?" என்று கேட்டாள். அவள் பேச்சு, கோபத்தையும் ரோஷத்தையும் நடனத்தினிடம் மூட்டவேண்டுமென்று இருந்தது. இந்தச் சூதை ஒருவாறு தெரிந்துகொண்ட நடனராணி, பாலாவின் நாவை அடக்கிஞள்.

மந்தச் செவியன் மருதன் செய்த இந்தச் சங்கடத்தை ஏதுமறியாத வீரமணி, நடனத்தை எண்ணியபடி கச்சிசென்று, மன்னன் வருகிருர் என்ற செய்தியை, கச்சி நகர்க் காவலனிடம் கூறிவிட்டு, மன்னனை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலே ஈடுபட்டிருந்தான்.

மன்னன் தன் பரிவாரங்களுடன், காட்டைக் கடந்து, கச்சிநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

•   •   •

உறையூரிலிருந்து தியாகவல்லி தன் சேடியருடன், மன்னன் கட்டளைக் கிணங்கக் கச்சி நகர் செல்ல ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தாள். அம்மங்கை சென்ருல், தானும் உடன் செல்லலாம், சென்ருல் வீரமணியைக் காணலாம் என்று நடனம் எண்ணிஞள்.

இதற்குள், யானைப்பாகர் யானையைக் கட்டுத்தறியினின்றும் நீக்கி அலங்கார அணிகள் பூட்டி, பிடரியின்மீது பொன் பூ வேலைப்பாடமைந்த மெத்தை வைத்துத் தைத்த அம்பாரியை அமைத்து, மலர் மாலைகளைச் சூட்டி யானையை அரண்மனை வாயிலிலே கொண்டுவந்து நிறுத்தினர். குதிரைப் படையினர் சிலரும் காலாட் படையில் ஒரு சிலரும், இரண்டோர் தேரும் அணிவகுத்து நிறுத்தப் பட்டன. தியாகவல்லி இந்தப் பரிவாரம் புடைசூழ, நகர இராசவீதி வழியே சென்று உறையூரைக் கடந்து கச்சிநகர் போகலாஞர்.

மன்னனும் பரிவார சகிதம் கச்சிநகர் புகுந்த அன்று, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. காஞ்சிபுரத்திலே குதூகலம் சொல்லி முடியாது. வீதிகளிலே புது மணல் பரப்பி, நகர மாந்தர் தோரணங்கள் அமைத்து ஊரை அலங்கரித்தனர், மாளிகைகளுக்குப் புதுச் சுண்ணம் பூசினர். வாழை கமுகு கட்டினர். மகர தோரண மமைத்தனர். ஒவ்வொருவரும் தத்தமது மனையிலே மணவினை நடத்தல் போலவும் விழா நடப்பது போன்றும் கருதி மகிழ்ந்து புத்தாடை அணிந்து புன்முறுவலுடன் மன்னன் வருகையை எதிர் நோக்கி நின்றனர்.

குலோத்துங்கனின் கீர்த்தி, மக்களின் மனத்தைக் கவர்ந்திருந்தது. மூவேந்தருள் சிறந்தும், முடிமன்னர்கள் பலரைத் தனக்குக் கப்பம் செலுத்துவோராகப் பெற்றும், வடநாட்டவர் அஞ்சிட வாழ்ந்த வல்லமை மிக்க மன்னன் ஆட்சியிலே இருப்பதை ஓர் பெருமை எனக் கருதிய மக்கள் மன்னனைக் காணவும், கண்டு களிப்படையவும், போற்றவும், வாழ்த்தவும், சமயம் வாய்த்ததைக் கண்டு மகிழ்வுற்றனர். கவிவாணர்கள் இனி நம்மை வறுமை விட்டது என்று எண்ணினர். சிற்பிகள் நமது திறனைக் காட்டி மன்னன் மகிழ்ச்சியைப் பரி

சாகப் பெறுவோம் என்று கருதிக் களித்தனர். இசை வல்லோர் புதுப் பண்கள் அமைத்தனர். ஆடலழகியரும் சதங்கைக்கு மெருகிட்டனர். வீரர்கள் தத்தமது ஆயுதங்களைச் சரிபார்த்துக் கொண்டனர். சிலம்பக் கூடங்களிலே சிரிப்பு! மாடமாளிகைகளிலே மகிழ்ச்சி! ஊரெங்கும் குதூகலம். கச்சிநகரே புத்துருப் பெற்றதோ என்று வியக்கும்வண்ணம் நகரமாந்தர், நானுவிதமான முறைகளிலே ஊரை அலங்கரித்து விட்டனர். ஊர்ப்புறத்தே கச்சிக்காவலன், படைகளுடன், காத்திருந்தான். அரச பவனிக்காக யானை, குதிரை தேர்கள் அணிவகுத்து நிறுத்திவைக்கப்பட்டன. மன்னன் ஊர்ப்புறத்தே வந்ததும், முரசு முழங்கிற்று. முரசொலி கேட்டதும். "வந்துவிட்டார் மன்னர்; மன்னர் வருகிருர்!" என்று ஊரே உற்சாகத்துடன் ஒலித்தது. பவனி நடந்தது, தோற்கருவி, ஆகிய பல்வேறு இசைக் கருவிகள் ஒலித்தன! வாழ்த்தொலி கடலொலிபோல்கிளம்பிற்று. "மன்னர் மன்னவா! வருக! எம்மை வாழ்விக்கும் இறையே வருக! மூவேந்தருக்கு முதல்வா வருக! முத்தமிழ் வளர்க்கும் வித்தகா வருக!" என்று பராக்குக் கூறினர் பாணர். "வையகம் போற்றும் மன்னர் வாழ்க! வாகை சூடிய வேந்தர் வாழ்க! சோழகுல ஜோதி வாழ்க!" என்று மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்தனர். வீதிகளிலெல்லாம் மக்கள் திரள் திரளாக நின்று மன்னனை வாழ்த்தி வரவேற்றனர். மாடங்கள்மீது மங்கையர் நின்று மன்னன்மீது மலர் தூவினர். சிறு பிள்ளைகள் யானை, குதிரை, சேனையைக் கண்டு வியந்தனர். ஆடம்பர ஊர்வலத்துக்குப் பிறகு மன்னன் சித்திர மண்டபம் சென்று தங்கினுன். சித்திர மண்டபம், முத்தமிழ் மண்டபமாயிற்று. விழாக் காண வெளியூரிலிருந்தும் பலர் வந்திருந்தனர். விருந்தும், வேடிக்கையும், அமோகம். மன்னன் சின்னுட்கள் அங்கு தங்கினுன். இதற்குள் ஏழிசை வல்லியாரும் வந்து சேர்ந்தனர். ஒவ்வொரு நாளும் அறிஞர்கள் உரையும், ஆடலழகிகளின் நடனமும் இசை விருந்தும் நடைபெற்றன. பல புலவர்கள் தமது நூற்களை அரங்கேற்றினர்! புதுப் பண்களைப் பாடிக் காட்டி இசைவாணர்கள் பரிசுகள் பெற்றனர். ஓவியக்காரரும், தத்தமது திறனை மன்னன் முன் காட்டி மகிழ்வித்தனர். மன்னன் பரிசுகள் பல வழங்கி அவர்களை மகிழ்வித்தான்.

ஆனந்தமாகச் சில நாட்கள் கழித்த பிறகு, மன்னன் அரச காரியங்களைக் கவனிக்கலானுன். காட்டைத் திருத்தத் திட்டங்கள், காறுறுகளை நீர்ப் பாசனத்துக்குப் பயன்படுத்தத் திட்டங்கள், உழவு முறைப் பற்றி புது ஏற்பாடுகள், பாலங்கள் அமைக்கும் திட்டங்கள் போன்றவற்றைப் பற்றி நிபுணர்களுடன் மன்னன் கலந்து பேசினுன். மக்களின் வாழ்க்கையிலே குறைபாடுகள் உள்ளனவோ என்று விசாரித்தான். அதுசமயம் பழுத்த உடலும், நரைத்த தலையும் படைத்த கிழவரொருவர், மன்னனிடம் வந்து நின்று, "மன்னவா! உன் ஆட்சி கண்டு ஆனந்திக்காதவர் இல்லை. தமிழகத்தின் தனிச் சிறப்பை நீ விளக்குகிருய்; ஆனுல்..." என்று இழுத்தாற்போல பேசிடவே, மன்னன், "முதியோரே! ஆனுல்......என்றீர்; முடித்தீரில்லையே! நான் மன்னன். ஆனுல் உம்போன்ற பெரியோர்களின் மொழிதான் எனக்குச் சட்டம். உமது மனதிலே குறையுளதேல் தயங்காது கூறுக" என்று கேட்க, அம்முதியோர், "எனக்கொன்றும் குறை இல்லை கொற்றவனே! ஆனுல், காலப்போக்கு என் நெஞ்சை வருத்துகிறது' என்ருர் "என்ன காலப் போக்கிலே உள்ள குறை தெளியக் கூறுமின்" என்று மன்னன் அன்போடுவினவினுன்.

ஞால விருந்து!

வெள்ளை நிலாவைக் கடைந்தெடுத் தேமலர்
வீசும் மணங் கலந்து—இசை
வேனிலை யுங்கலந்து—இன்பப்

பிள்ளைப் பருவத்தி லுன்னை யணைத்திட்டக்
கோலம் தருந்தாகம்—பெரு
ஞால விருந்தாகும்!

இன்பப் பிணைப்பிற்கு ளொன்றித் திளைத்திட
இன்னுந் தயக்கமேனே?—காமக்
கால னியக்க மெனிற்—கொடுந்

துன்பச் சேற்றி லுழன்றிடு மென்னுடைத்
துயரினைப் போக்கிடுவாய்—இன்பத்
துகளினை யாக்கிடுவாய்!

கூவுங் குயின்மொழிக் கூவ லினித்திடக்
காவி னிடைக்குருகே—நற்
சோலைக் குளிர்தருவே!—உட

லாவி யுனைவிட்டுப் பாவியேன் நின்றிட்டுப்
பார்த்திட்ட போழ்தினிலே—எங்குப்
போயினை சேல்விழியே?

ஓ!மடப் பெண்மயி லேயுடன் காவிற்(கு)
ஓடிநீ வந்தி டுவாய்—இன்ப
வாவியுள் நீந்திடவே!

ஆமினிப் பேரின்பம் நீவரி லுண்டென
ஆர்த்திடு வேனினி நான்!—துயர்
தீர்த்திடும் நீவன மான்!

—பொருநைத்துறைவன்

இலட்சியம் வாழட்டும்!

ஜே. வி. நாதன்

எழுத்தாளர் புவனம்!

இலக்கியம் என்ற பெயரில் கறை படிந்த எழுத்துக்களைப் பிரசுரித்துக் காசு சம்பாதிக்கும் பத்திரிகைகளும், பணத்துக்காக எதையும் எழுதத் தயாராயிருப்பவர்களும் மலிந்துவிட்ட இந்நாளில், எதைக் கொடுத்தால் வாசகர்கள் விரும்புவார்கள் என்று பாராமல், இந்த நாட்டின் பண்பும், புனிதமும், தார தம்மிய ஒழுக்க வழக்கங்களும் குறைவுபடாமல் வாசகர்களுக்கு எதைக் கொடுக்கவேண்டுமோ அதை — எதிர்ப்புகள் பலவற்றுக்கிடையே வழங்கி வரும் இலக்கிய கர்த்தா அவர்!

''வயிற்றிலே மூணு மடிப்புத் தசை தெரிகிற மாதிரி காலே அரைக்கால் மீட்டரில் ஜாக்கெட் தைத்துப் போட்டுக்கொள்வதும்; அந்த ஜாக்கெட், வயிற்றின் மென்மையை வெளிச்சம் போடுவதோடு, முதுகிலே முக்கால் பகுதியையும் திறந்து காட்டி, காற்றுக்கும் கண்களுக்கும் அழைப்புவிடுவதும் சுத்த அநாகரீகம்...!'' என்று எழுத்தின் வாயிலாகப் பெண்களை எத்தனை ஆவேசத்துடன் கண்டிக்கிறாரோ, அதே வேகம், 'டைட்'டும் ஜீன்சும் போட்டுக்கொண்டு 'பீட்டில்ஸ்' வேடத்தில் தலையைக் குதறிவிட்டுக் கொண்டு நாகரிகம் என்கிற பெயரில் திரியறதும், பெண்களைக் கண்டால் பல்லிளித்து கமெண்ட்ஸ் என்ற பெயரில் காலித்தனமாப் பேசறதும், அவங்க மேலே தற்செயலா நிகழ்ந்தது மாதிரி உரசறதும் எத்தனை பெரிய காட்டுமிராண்டித்தனம்.........!'' என்று அவருடைய சமுதாயச் சாடுதல்களை எழுத்தின் வேகத்தில் படிக்கும்போது—வாதப் பிரதிவாதங்களில் உள்ள நியாய அநியாயங்கள் படிக்கிறவர்கள் மனதிலே பளிச் பளிச் சென்று புலப்பட்டுக்கொண்டே வந்து பிரமிக்கச் செய்ய, ''ஓ!...இவர்தான் எத்தனை தீர்க்கமாய், ஆழமாய் சிந்தனை செய்கிறார்!'' என்று அவர்களை வியப்பில் ஆழ்த்திவிடும்.

அற்புதமான படைப்பு அந்த நாவல். இரவு பகலாக உழைத்து தன் குருதியையே மசியாக்கி எழுதி எடுத்துச் சென்றார் புவனம்.

''இதோ பாருங்க. எழுத்தாளர் சார்! லட்சியம் கிச்சியம்னு கன்னா பின்னா'ன்னு சமூகத்தைத் திட்டி எழுதிட்டா ஆச்சுதா? நீங்க எழுதறதைக் காசு கொடுத்து வாங்கறதே அந்தச் சமூகம்தானுங்களே! உங்களுக்கு திடீர்க்கொலை சீரிஸ் — 'கண்ணே ஓடிவா! 'காதலியின் முத்தம் கத்தியில் ரத்தம்!' இப்படியெல்லாம் எழுத முடிஞ்சா எழுதிகிட்டு வாங்க. இன்னிக்கு மார்க்கெட்லே அதான் ஓடும். முதலிரவு, காதலன் காதலி கள்ளச் சந்திப்பு, கடற்கரைத் தோணி மறைவில் 'இச்!...இச்! இப்படி சுவையாகக் கதை எழுதத் தெரிஞ்சா வாங்க. சும்மனாச்சிக்கும் சமுதாயத்தைச் சீர்திருத்தறேன்னு எழுதிகிட்டு வராதீங்க அதை எவனும் வாங்கமாட்டேன்கிறான்...''

புத்தக வெளியீட்டாளர் பரமசிவம் 'பிஸினஸ் டெக்னிக்' பற்றி பச்சையாகவேப் பேசினார். சோர்வோடு திரும்பினார் புவனம்.

புவனம் மாதிரி இலட்சிய எழுத்தாளர்களுக்கென்று ஒரு தரமான வாசகர் கூட்டம் இருக்கும். ஆனால் அந்த இலட்சிய வாசகர்கள் காசு கொடுத்து எதையும் வாங்கிப் படிக்க முடியாத ஏழைகளாகத்தான் இருப்பார்கள்!

புவனனுக்குப் பசியெடுத்தது. இலக்கியப் பசி உள்ளவர்கள் கேவலம் வயிற்றுப் பசியைத்தானா கவனிக்கப் போகிறார்கள்? ஆனாலும்— வயிறு என்று ஒன்று இருந்த காரணத்தால், மனைவியும் வயது வந்த மகளும் ஒரு பந்தமாய் இருந்த காரணத்தால அவர் பணத்தைப்பற்றி நினைக்க வேண்டியதாயிற்று.

பணத்தைக்கூட மறந்துவிடுவார் — எழுத்தில் மூழ்கிவிட்டார் என்றால் எழுத்து! எழுத்து! சாகாத காலத்தை வென்று நிலைக்கும காவிய எழுத்து!...இதுதான் அவரின் உயிர்மூச்சு.

கருமேகங்களில் மின்னல் பளிச்சிடுவதைப்போல, அத்தனை ஏழ்மையிலும் அந்த எழிற்காவியம் பளிச்சிட்டு அவர்களின் கவலைக்கு அருமருந்தாய், குடும்பப் பிரச்னைக்கு ஒரு வழிகாட்டியாய் அப்பாவின் இலக்கியப் பணிக்கு ஒரு ஆதரவாய் இருந்து வந்தது.

கற்பகம்! ஆம்; அதுதான் அந்த அழகுக் கொடியின் பெயர்.

வீட்டில் தையல் இயந்திரத்தை வைத்து அதன் மூலம் கிடைக்கும் சிறு வருவாயில் வீட்டுப் பிரச்னைகளை ஓரளவு தீர்க்கவும், காலை வேளையில் கனசபை நகரில் ஒரு பணக்காரர் வீட்டுக் குழந்தைகளுக்கு டியூஷன்' சொல்லிக் கொடுப்பதன் மூலம் தந்தைக்கு வேண்டிய காகிதம், மசிப்புட்டி.... தபால் தலைகள் இவற்றையும் அவளால் உதவ முடிந்தது.

''இரண்டு மாத வாடகை பாக்கியை இன்னும் ரெண்டே நாளில் கீழே வைக்காவிட்டால் நான்பொல்லாதவனாகிவிடுவேன்.....ஆமாம்!'' என்று உறுமிவிட்டுப் போனார் வீட்டுக்குச் சொந்தக்காரர். வீட்டில் மறுநாளைக்கு அடுப்பு புகையக்கூட வழியில்லாத அளவு பற்றாக்குறை!

கையிலிருந்தநாவலின் கையெழுத்

துப் பிரதிமையைச் சீ எறிந்தார் புவனம்.

"...இரத்தக்கொலை சீரிஸ்' எழுதத் தெரிஞ்சா வாங்க......அதைத்தான எல்லோரும் வாங்கறாங்க...!" புத்தக வெளியீட்டாளரின் பேச்சு நாராசமாக நினைவில் எழ, "மாட்டேன்!... நான் 'இலக்கியக் கொலை' செய்ய முடியாது!......" என்று தனக்குள் கூறியபடி வேகமாக நடந்தார்.

• • •

வாங்க சார் வாங்க!......நேரா ரோடு மேலேயே பேசியிண்டிருந்தா எப்படி? இப்படி வாங்கோ—போன வாரம் மலர்க்கொத்து'விலே உங்க குறுநாவல் ரொம்பப் பிரமாதம்... இப்படி இந்த நாற்காலியிலே உட்காருங்கோ!

வலுக்கட்டாயமாக அழைத்துக் காபி போட்டுக்கொண்டு வந்து நீட்டினான் மணி. புவனம் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

அவருடைய அபிமான வாசகன் அவன்!

மேலவீதியில் தபாலாபீசுக்குத் தெற்கே, ஒட்டினாற்போல 'மணி காபிபார்' என்று போர்டு பார்த்திருப்பீர்களே, காபி விற்பனைக் கிடையிலும் சிறு ஓய்வை ஒதுக்கிக் கொண்டு நல்ல நூல்களை பத்திரிகைகளை வாங்கி வாசிப்பது அவன் வழக்கம். புவனத்தின எழுத்து என்றால் அவனுக்கு உயிர்! தெருவிலே அவரைக் கண்டு விட்டால் போதும், அழைத்துத் தன் கையாலேயே காபி போட்டுத் தந்து அவரைப் புகழ்ந்து ஏதாவது சொல்லாவிடில் அவன் தலை வெடித்து விடும். காபிக்குக் காசுதந்தால் வாங்க மறுத்து விடுவான். அன்று மணி கேட்டான்.

"ஏன் சார், என்னவோ போல இருக்கீங்க?..."

"ஒண்ணுமில்லேப்பா மணி!" வறுமையின் வெறுமை தன் முகத்தின் மூலம் வெளிப்பட்டு விடுமோ என்று பயந்தவரேபோலும் புவனம் அவசர அவசரமாய் எழுந்தார். மணி கூறினான். "என்னமோ சார். நான் டபரா செட் கழுவற சாதாரண மனிதன். எனக்குக் கவலைகள் இருந்தா அது சகஜம். ஆனா உங்களுக்கு இருக்கிற புகழும் அறிவும்... உலகத்தையே உங்க எழுத்தாலே திருத்தறீங்க. நீங்க எதுக்காகக் கவலைப்படணும்?

"கவலைங்கிறது ஆள் தராதரம் பார்த்து வருகிறதில்லைப்பா மணி!" என்று சொல்ல முயன்றவர் போலவும் ஆனால் பேச மனமில்லாதவர் போலவும் வெறுமைச் சிரிப்புடனும் சூனியத்தில் லயித்த பார்வையுடனும் எழுந்த புவனம் தம் வீட்டை நோக்கி நடையைக் கட்டினார்.

எதிரே வந்தான காக்கி சட்டைக்காரன்!

"சார் உங்களுக்கு மணியார்டர் வந்திருக்கு..." தபால் சேவகனின் சொற்கள் குளிர் மழையென அவர் நெஞ்சில் ஈரம் பாய்ச்சின.

சென்ற வாரம் வெளியான அவருடைய குறு நாவலுக்கு பத்திரிகை ஆசிரியர் ஐம்பது ரூபாய் அனுப்பியிருந்தார். புவனத்தின் நிலையில் அது ஐம்பதாயிரத்துக்குச் சமானம். கையெழுத்திட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு நகர்ந்தார்.

"இருங்க சார், கவர் ஒண்ணு இருக்கு தரேன்!"

கவரை வாங்கினார். 'திரு. புவனம் அவர்கள், எழுத்தாளர்......' என்ற குண்டான எழுத்துக்கள் — மிகவும் பரிச்சயமான கையெழுத்து — யார் எழுதியிருப்பார்கள்?

வீட்டுக்குப்போய் நிதானமாகப் படித்துக் கொள்ளலாம் என்று கவரைப் பத்திரப் படுத்திக்கொண்டு பணம் வந்துவிட்ட மன நிறைவுடன் விரைந்தார் புவனம். வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தபோது பதறியடித்துக்கொண்டு மூச்சிரைக்க ஓடி வந்தாள் அவருடைய மனைவி பாகீரதி.

"ஏங்க நம்ம கற்பகத்தைப் பார்த்தீங்களா?..."

புவனத்துக்கு ஏதும் புரியவில்லை. எதற்கு இத்தனை பதற்றம், துடிதுடிப்பு? "ஏன் கேட்கிறாய் பாகீ?"

காலையில் டியூஷனுக்குப் போனவளை இப்போ உச்சிப் பொழுதாகியும் காணோமுங்க?..." — பெற்ற வயிற்றின் பதைபதைப்பு.

பணத்தை மனைவியிடம் கொடுக்கவும் மறந்தவராய், அந்த உச்சி வெயிலில் வந்த வேகத்திலேயே திரும்பி விரைந்தார் புவனம். கனகசபை நகரில் கற்பகம் டியூஷன் சொல்லிக் கொடுக்கும் வீட்டுக்குள் சென்றபோது, "இன்னிக்கு டியூஷனுக்கு கற்பகத்தைக் காணலையே— உடம்பு கிடம்பு சரியில்லையா என்ன?......" என்று அவரிடமே கேட்டார்கள்.

பசி மயக்கம். மனதில் குழப்பம், இனம் தெரியாத பீதி அடிவயிற்றில் கனன்று எழ, தளர் நடையுடன் மண்டையைப் பிளக்கும் வெயிலில் அவர் திரும்பியபோது...

வானமே தூள் தூளாகச் சிதறுகிறதோ......தலை கிறு கிறுவெனச் சுழன்றது அவருக்கு. அச்சமயம்—

"வாங்க சார்......இப்படி உக்காருங்க! எங்கே இந்தக் கொளுத்தும் வெயிலில்..." என்ற உற்சாகமான குரல்—காபிக்கடை மணிதான்!

தன்னையும் அறியாமல் அத்தனை தூரம் நடந்து வந்திருக்கிறோம் என்று லேசாகப்புரிய ஆரம்பிக்கவே அந்தக் கடையிலேயே அமர்ந்து சற்று சிரமபரிகாரம் செய்துகொண்டார். மனம் உழன்றது. கற்பகம் எங்கே போயிருப்பாள்?

உச்சிப்போதில் காபி விற்பனை கிடையாது. மாலை மணி நான்கு ஆகும் வரை 'காபி பார்' வெறிச்சென்றிருக்கும். மணி பேசிக்கொண்டே அவர் எதிரே அமர்ந்து ஒரு தாளைப் படித்தான். சட்டென்று புவனனுக்கு அன்று காலையில் வந்த கவர் ஞாபகம் வந்தது. அந்தக் குண்டு குண்டான கையெழுத்து...

ஓ! நினைவுக்கு வந்துவிட்டது அது—அவருடைய மகள் கற்பகத்தினுடைய கையெழுத்தேதான்!

அவசர அவசரமாக சட்டைப் பையினின்றும் கவரை எடுத்து வேகமாகப் பிரித்தார். கைகள் நடுங்கின. கண்களை ஓட்டினார்:

அன்புள்ள அப்பாவிற்கு,

கற்பகம் வணக்கத்துடன் எழுதிக்கொண்டது. நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். இந்தக் கடிதம் உங்களுக்குப்பத்துமணித் தபாலில்தான் கிடைக்கும். நான் காலை ஒன்பது மணிக்கே உங்களை விட்டு-இந்த ஊரைவிட்டே அகன்றிருப்பேன். தனியாக அல்ல; அவருடன்தான்! யார் அந்த 'அவர்' என்று கேட்கிறீர்களா? அப்பா! உங்களுக்கு 'இலக்கியப் பசி'யைத் தெரியும். அம்மாவுக்கு நம் வயிற்றுப் பசி தெரியும். இவ்விரண்டு பசிகளைத் தவிர இன்னொரு பசியும் உண்டே. உங்களுக்குத் தெரியுமா அப்பா...வாழ்க்கைப் பசி...? பருவம் வந்து எட்டு ஆண்டுகளாக வீட்டில் வளைய வளைய வரும் உங்கள் மகளைப்பற்றி—அவளுக்கும் ஒரு பசி ஏற்பட முடியும் என்பதைப்பற்றி—நீங்கள் ஒரு கணமாவது சிந்தித்தீர்களா? வறுமை உங்களைச் சிந்திக்கவிடவில்லை; அதனால் அது உங்கள் குறையுமல்ல, ஆனால் நான் ஒரு பெண். என்னேடொத்த பெண்கள் திருமணம் ஆகி. இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயும் ஆகியிருப்பதைப் பார்க்கையில் ...ஓ! வெட்கத்தை விட்டு உங்களிடம் வந்து, "அப்பா! எனக்கு

(11-ம் பக்கம் பார்க்க)

எழுத்தோவியம் எப்படி இருத்தல் வேண்டும்?

வி. கி. மூர்த்தி

மிக களைத்துப் போய் களைத்து நிற்கும் வலிய புரவியைத் தார்க்குச்சியினால் அடித்துத் துன்புறுத்தல் போன்று, கற்பனை ஊற்று சுரக்காத போது யோசித்து யோசித்து எழுதப்படுவது இலக்கியமாகாது! எழுதத்தொடங்கியதும் கொட்டும் அருவியாக, குழைந்தோடும் நீரோட்டம் என கருத்துக்கள் ஒன்றையடுத்து ஒன்று சரமாரியாக வந்தவண்ணம் இருக்க வேண்டும்!

கற்பனை ஓர் ஊற்றெனில், அதில் ஊறும் நீர் தெளிந்த நீராகவும், குடித்ததும் தாகவிடாயினைத் தணிப்பதாகவும் அதில் அழுக்குத் துணிகள் எளிதில் வெளுத்திடுவனவாகவும், சோப்பு நிரம்ப நுரைக்கும் அளவு உவர்ப்புத் தன்மையற்ற மென்னீராகவும் இருத்தல் வேண்டும் என்பதுபோல, சொல்லப்படும் கருத்துக்கள் தெளிவாகவும், அறிவுத்தாக உணர்ச்சியைப் போக்கத் தக்கனவாகவும், மக்களிடம் பரவியுள்ள மூடத்தனம், மந்தவுணர்வு போன்றவற்றை நீக்குவனவாகவும், இக்கருத்துக்களின் அடிப்படையில் இவற்றைப் பின்னணியாக அல்லது முன்னோடியாகக் கொண்டும், சாற்றியோ அன்றி சாடியோ திறனாய்வு வடிவிலும் கருத்துக்கள் எழவேண்டும்! இப்படி மணம் பரப்பிடும் பூக்கள் பல மலர்ந்திட வகை செய்திடும் எழுத்தோவியம் இலக்கிய மகுடத்தில் பதிக்கப்படும் ஒளி உமிழும் வைரமெனத் திகழும்!

இசை எவர் மனத்தினையும் பற்றி ஈர்த்திடும் இணையற்ற சக்தியினைப் பெற்றுள்ளது! எனவே எழுத்தோவியங்களுள் கவிதை முதலிடம் பெறுகிறது! தமிழ் இலக்கிய வரலாற்றில் பதினாறு பதினேழு நூற்றாண்டுகள் வரை படைக்கப்பட்ட இலக்கியம் யாவும் இசைத் தமிழிலேதான்! ஏடொன்று இலக்கிய படைப்பாகத் திகழ்ந்திட அது உணர்ச்சிப் பிழம்பாக இருந்திட வேண்டும்! கவிதைகள் மனத்தினைக் கவர்ந்து, உள்ளத்தை உலுக்கி, இதயத்தைக் கசக்கிப் பிழியத் தக்க சக்தியினைப் பெற்று, மொழிப் பற்று, நாட்டுப் பற்று எனும் உணர்ச்சிகளை ஓங்கச் செய்யும் எழுச்சியைத் தரத்தக்க இணையற்ற இலக்கியப் பிரதியாக, ஒப்பற்ற உணர்ச்சிப் பிழம்பாக இருத்தல் வேண்டும்!

நடுகோடின்றி சித்திரம் வரைய இயலாது; அனுபவம் இன்றி அல்லது ஓர் இயற்கைக் காட்சியைப் பாராது தீட்டப்படும் எழுத்தோவியம் சிறப்பாக அமையாது! இலக்கியம் படைத்திட விரும்புபவர் மனிதர்களின் பண்புகளைப் பகுத்துணரும் வன்மையும் பழுத்த அனுபவமும், ஆழ்ந்த அறிவும் முதிர்ந்த புலமையும் உடையவராக இருத்தல் வேண்டும்!

மடைத் திறந்த வெள்ளமென இயல்பாகவே எதுகை மோனைகளுடன் கவிதை யாப்பவரும், உரைநடை எழுதுவோரும் உண்டு; எழுதுவதற்கு முன்பு எதுகை மோனைகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு, அவை பொருந்தும்படியாக வெறும் வாக்கியங்களை அமைப்பவர்களும் உண்டு! பாடலுக் கேற்ப இசை அமைப்போரும் உண்டு! இசைத் தட்டைச் சுழலவிட்டு இசையைக் கேட்ட பின்பு, திரைப் படத்துக்கு பாடல்கள் எழுதுவோரும் உண்டு! மனத்தினைக் கட்டுப்படுத்தி அறிவு கூறும் பாதையில் பயணம் மேற்கொள்வோரும் உண்டு! மனம் விரும்பும் மார்க்கங்களில் செல்வோரும் உண்டு! தற்கால நியதி தீங்கிழைப்பது, தீமை பயப்பது எனில் தனது உள்ளத்துக்கு ஏற்ப, உணர்ச்சிக்கு ஒருப்பட்டு கருத்துக்களை வெளியிட வேண்டுமே அல்லாது, கைத் தட்டலோ பகட்டான விருதோ அன்றி கனிவான பாராட்டோ பெற்றிடும் அற்ப நோக்கினில் தீட்டுவதும் பேசுவதும் கூடாது!

காடுமேடு என பாராது வேகமாக பாய்ந்து வண்டியினை இழுத்துச் சென்றிடும் காளையினை மூக்கணாங் கயிறு கட்டுப்படுத்துவது போன்று, தீயவனை அத்தூர்க்கத்தனமான பாதையினின்று திருத்தி அமைத்திடும் சக்தி படைத்த நீதி உரைகளை எழுத்தோவியங்கள் கொண்டிருத்தல் வேண்டும்!

முக்காடிட்டு முகம்மூடி படுத்துறங்குபவனின் முதுகில் சவுக்கு முனைப்பட்டதும் அவன் எப்படி சோம்பல் முறித்து விழித்து எழுவானோ, அதுபோல் ஏட்டினைப் படித்தவுடன், சோம்பித் திரிந்து சோறு இல்லை என சோககீதம் பாடிவரும் போக்கற்றோர் உய்த்திடும் விழிப்புணர்வுச் சுடரினை ஏற்றுவதாய் எழுத்தோவியம் இருத்தல் வேண்டும்!

உழைப்பு எனும் நுழைவுச் சீட்டினைக் கொண்டுதான் நல்வாழ்வு எனும் மாளிகைக்குள் செல்ல முடியும்! உழைப்பே ஊதியம் தரவல்லது! அதுவே பெறற்கரியது!

ஒன்றே இனம்! ஒருவனே ஈசன்! பேதம் பிரிக்கும் வேதங்கள் நாகரிகத்தைச் சேதப்படுத்துவன நல்லொழுக்கத்தைச் சிதைப்பன! என்பன போன்ற கருத்துக்களை நீரினைச் சூலாகக் கொண்டு திரிந்து வரும் மேகங்களைப் போன்று எழுத்தோவியம் எனும் வானில் மிதக்கவிட வேண்டும்!

பாயசத்தில் பாதம் பருப்பு இருந்திட வேண்டும் என்கிற அவசியம் இல்லை; ஆனால் பழைய சோற்றில் உப்பு இருந்துதான் ஆகவேண்டும்! உப்பற்ற உணவினை உண்பதற்கு நா ஒப்பாது! அதுபோலவே, அடுக்குமொழியும் எதுகை மோனைகளையும் அள்ளி வீசாமல் எழுதினாலும் எழுதலாம், அர்த்தமும் பொருத்தமும் இன்றி எழுதுதல் கூடாது!

நாற் பட்டால் கெடுவதும், இராப் பட்டால் மூசி விடுவதும், பாலுக்கும் உணவுக்குமே பொருந்துவதாக இருக்க வேண்டுமே அல்லாது, பழைய கதை, பழைய கட்டுரை என்று மதிப்பிழந்து விடுகிற அளவில் சொற்சித்திரம் அமையக் கூடாது.

ஷேக்ஸ்பியர் தமது நாடகங்கள் பிற்காலத்தில் ஒரு பேரிலக்கியத் தொகுப்பாகத் திகழும் என கிஞ்சிற்றும் கருதினாரில்லை! மேடையில் நடிக்கப்பட்ட அவை இன்று மேதினி முழுவதும் ஆங்கிலம் அறிந்தோர் அனைவரின் மனத்தினையும் கவரும் சிறந்த இலக்கிய தன்மையினையும், தரத்தினையும் பெற்றுள்ளன! விஞ்ஞான பரிமாண வளர்ச்சிதான் நாடகம் திரைப்படமாக மாறியது! எனவே திரைப் படங்கள் பிற்காலத்

(11-ம் பக்கம் பார்க்க)

9-ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்க்கைப் பசி வந்துவிட்டது. திருமணம் செய்து வையுங்கள்!'' என்று நான் கூறமுடியுமா? நான் ஒரு பெண் அப்பா! நீங்கள் அடிக்கடி எழுதுவீர்களே, 'தாய்மை அடையும்போதுதான் ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை நிறைவு அடைகிறது' என்று — அந்த நிறைவும் பாக்கியமும் என் வாழ்க்கையில் வெறும் நினைவும் கனவுகளுமாகவே இருந்துவிடுமோ என்று அந்தரங்கத்தில் சோக நிழலிட்டிருந்த வேளையில் அரசு என்னைத் தேடிவந்தார். கனகசபை நகருக்கு டியூஷன் சொல்லித் தர வரும் வழியில் தினமும் அவரைச் சந்திப்பேன். விழிகளால் மலர்ந்த உறவு காதலாகப் பரிணமித்தது. பெற்று வளர்த்தவர்களுக்கு தீராப் பழியைத் தேடித் தருவதுதானு மகளின் கடமை என நீங்கள் கேட்கலாம், என் நிலையில் வேறு வழியில்லை. மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்கிறேன். அவரின் நிழலாக நான் செல்கிறேன். அவர் போகுமிடமெல்லாம் பின் தொடர வேண்டிய நிழல்தானே இனி நான்! அம்மாவுக்கு ஆறுதல் சொல்லுங்கள், என் தந்தையின் மன்னிப்பு எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் போகிறேன்'' உங்கள் மகள்,

கற்பகம்.

கண்களில் நீர் வழிய, பிரமை பிடித்தவராய் சிலையென அமர்ந்திருந்தார் எழுத்தாளர் புவனம்.

அவர் கையினின்றும் நழுவி விழுந்த கடிதத்தைப் படித்த மணி, ''அடி பாவிப்பெண்ணே! என்ன காரியம் செய்துட்டே?'' என்று முனகினன்.

சிறிது நேரம் அவர் அழட்டும், நன்கு அழுது ஓயட்டும் என்று விட்டுவிட்டவன் போல மௌனமாக அமர்ந்திருந்தான் மணி. பிறகு அமைதியைக்கலைத்தபடி பேசினன்.

''சார், அந்தப் பெண் செய்தது தப்பு இல்லேன்னு நான் நினைக்கிறேன். ஏன் தெரியுமா? படருகிற வேளை வந்ததும் சரியான கொழுகொம்பு தேடிக் கொடுக்கிறது கொடியைப் பயிரிட்டு வளர்க்கிறவன் வேலை இல்லையா? நீங்க பருவம் வந்த மகளுக்கு இத்தனை ஆண்டுகளாகக் 'கொழுகொம்பு' தேடாமலே அலட்சியமாய் இருந்தீங்க. கொடி தானுகவே படர்ந்துடுச்சு, கொடி மேலே குற்றம் சொல்லிப் பயன்...? விட்டுத் தள்ளுங்க சார், எங்கேயாவது அவங்க நல்லா இருந்தா சரிதான் — கவலையைத் துடைச்சிட்டு சிரியுங்க சார்!...''

புவனம் சிந்தித்தார்: 'உலகையே சீர்திருத்துகிற எனக்கு – சமுதாயத்தின் பிரச்னைகள் பலவற்றிற்கு வழி வகுக்கிற எனக்கு கொடியானது படரும் வேளை வந்ததும் அதற்குக் கொழுகொம்பு தேடித் தரணும்கிற சாதாரண உண்மை தெரியாமப் போச்சே! ஒரு சராசரி மனிதனுக்குத் தெரியாத உண்மைகூட எனக்குத் தெரியலேன்னு அதுக்குக் காரணம் என்ன?...அதற்குக் காரணம் என் இலக்கியப் பசிதானே? இருக்கட்டும் ...இருக்கட்டும்!'

ஏதோ தீர்மானத்திற்கு வந்தவர் போல் எழுந்து தீவிரமாக நடந்தார் புவனம்.

இதுவரைக்கும் தன் வயிற்றுப் பசியை விட, மகளுடைய வாழ்க்கைப் பசியைவிட புவனனுக்கு இலக்கியப் பசியே பெரிதாக இருந்தது. இனி...?

இனிமேலும் அப்படியே இருந்து வரும் என்பதை இதோ, மன வைராக்கியத்துடன், உறுதி பளிச்சிடும் முகத்துடன் அவர் நிமிர்ந்து நடை போடுவதிலிருந்து நமக்கு நன்கு புலப்படுகிறது.

அந்த இலட்சிய உள்ளம் வாழட்டும்! ●

10-ம் பக்கத் தொடர்ச்சி

தில் நின்று நிலைக்கும் இலக்கியமாகத் திகழ்கிறவிதத்தில்தயாரிக்கப்பட வேண்டும்! வகுப்பிலே திரைப் படத்தைக் காண்பித்து, அதிலே மாணவர்களுக்குத்தேர்வுநடத்துகிற விதமாய் சிறப்புத் தன்மைகள், சீலம் போதிக்கும் நீதி உரைகள் இவற்றைக் கொண்டதாக திரைப் படங்கள் இருக்க வேண்டும்! பணத்துக்காக ஆபாசமாக படம் எடுப்பதும், பாடல் எழுதுவதுமான கெட்டப் பழக்கம் விட்டொழிக்கப்பட வேண்டும்!

இந்நூற்ருண்டின் மையப் பகுதியில் பிற்காலத்தில் இலக்கியமாகத் திகழும் தகுதி பெற்ற மிகச் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டுள்ளன! அவை அரசியல் இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம், சீர்திருத்தம் பகுத்தறிவு கல்வி முதலிய பல துறைகளைப் பற்றி விளக்குவனவாக மட்டுமன்றி, சொற்பொழிவுகள் எப்படி இருக்க வேண்டும் என இலக்கணம் போதிப்பதாகவும் உள்ளன!

தேர்வில் கேட்ட வினவுக்கு மட்டுமே பதிலளிக்க வேண்டும்! இக் கேள்விக்கான விடையினை விட மேலும் அதிகம் படித்திருக்கிறேன் என்பதைக் காட்டிக்கொள்ளும் விதமாக, வினவுக்கு எந்தக் கோணத்திலும் தொடர்பில்லாதவற்றைத் தேர்வுத் தாளில் எழுதுவோரும் உண்டு! தலைப்பு தரப்படுவதன் காரணம், பேச்சு சகல அம்சங்களைப் பற்றியதாக இருக்கக்கூடாது; குறிப்பிட்ட ஒன்றைப் பற்றியே பேச்சாளர் உரையாற்ற வேண்டும், என்பதற்காகத் தான், என்பதை சொற்பொழிவாளர் உணர்ந்து, எடுத்துக்கொண்ட தலைப்பு பற்றியே பேச வேண்டும்!

பேச்சு பனைமரம், தென்னை மரமாக இல்லாமல் பனந்தோப்பு, தென்னந்தோப்பாக இல்லாமல் பரந்து விரிந்துள்ள ஒரே ஆலமரமாக இருக்கவேண்டும்! பனைமரம் தென்னைமரம் நிழல் தரும் கிளைகள் இன்றி உள! ஆனல் பேச்சு பல ஆதாரங்களையும், எடுத்துக்காட்டுகளையும் கொண்டதாக இருக்க வேண்டும்! பனந்தோப்பு, தென்னந்தோப்புபோல் எல்லாம் ஒரே மரமாக இருப்பதுபோல் பேச்சில் சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்லக்கூடாது!

பல கிளைகளை உடையதாயும், வேரொரு மரத்துக்கு விழுது விடுவதாயும் தங்குவோர் இளைப்பாறவும், களிப்புறவும் நிழல் தரும் ஆலமரம் போன்று பேச்சு இருக்கவேண்டும்! ஆதாரம் பலவும் எடுத்துக்காட்டுகள் பலவும் கொண்டதாக, பல சிக்கல்களை அலசுவதாக முடிவில் அதற்கோர் தீர்வு தருவதாக, கேட்போர் மனத்துன்பம் மறந்து, இலக்கியத் தேன்பருகும் விதமாகப்பேச்சு இருக்கவேண்டும்!

சிறிய விதையைக் கொண்டு பெரிய ஆலமரம் வளர்வதைப் போன்று சிறிய விஷயத்தைப்பற்றி பேசினுலும் மேற்சொன்ன தன்மைகளை உடையதாகப் பேச்சு இருக்க வேண்டும்! பேச்சு கேட்போர் மலைக்கத்தக்கதாக கேளாதோர் கேட்க விரும்புவதாக இருக்க வேண்டுமே அல்லாது, கேட்போர் சலித்துப்போகும் வண்ணம் அமைதல் கூடாது! சொற்பொழிவு சோர்வுபோக்குவதாக,குழப்பம்நீக்குவதாக, பிரச்சினையைத் தீர்ப்பதாகச் சிக்கல் தவிர்ப்பதாக, கொள்கை முழக்கமாக கூடியுள்ளோர் கூறப்படும் கருத்துக்கு ஒருப்படும் வகையில் முற்போக்கு கருத்துச் சூல்களைக் கொண்டதாக சொன்னமாத்திரத்தில் எளிதில் விளங்கும்படியாக அமைய வேண்டும்! ●

அழகில் அழகு

—மலையமான்—

பழந்தமிழ்ப் பெண்கள் எப்போதும் தங்கட்கு அழகுதரும் அணியாகக் கற்பினை வைத்துப் போற்றி வந்தனர். கற்பு என்பதனை இக்காலத்தவர்—மேலை நாட்டு நாகரிகத்தால் கவரப்பட்ட இக்காலத்தவர் மிக எளிதாகப் பொருள்படும் ஒரு சொல்லெனஎண்ணியிருக்கின்றனர். இது தொடர்பாக நம் தமிழ்ப் பெண்கள் எவ்வளவு நுண்மையும் கூர்மையும் மிக்கவராய் இருந்தனர் என்பதை அறிய சங்கத் தமிழ் நூல்கள் நிறைய உதவுகின்றன.

தன்னைக் கொண்டவன் தன்மீது கொண்ட நல்லெண்ணத்தையே தன் உயிரினும் மேலானதொன்ருகப் போற்றி வாழ்ந்த மகளிர் நம் தமிழ் மகளிர் அவர்களுடைய வாழ்க்கை கற்பனைக்கும் எட்டாத தூய்மையும் நுண்ணுணர்வும் அமைந்ததாகஇருந்திருக்கிறது என்பதை இலக்கியக் காட்சி ஒன்று சித்திரிக்கிறது. அதுதான் இது.

குளிர்ச்சி தரும் உயர்ந்த மலைச் சாரல். ஒரு தலைவனும் தலைவியும் மகிழ்ந்திருக்கின்றனர். தலைவியின் தோழியைத் தவிர இதனை யாரும் அறிய மாட்டார்கள் தலைவன் குற்ற மற்ற கொள்கையினை உடையவன். இனிய உள்ளத்தினன்.

இப்போது ஏதோ அலுவல் காரணமாகத் தலைவன் தலைவியைச் சந்திப்பதிலே சிறிது காலம் தாழ்ந்து விட்டது. தலைவியைக் கவலை கவ்விக் கொள்ளவே கைவளைகள் நெகிழ்கின்றன. கண்கள் உறக்கந் தவிர்க்கின்றன. கட்டழகு கட்டவிழ்கிறது. மெல்லியல் மென்மேலும் மெலிகிருள்.

காரணம் அறியாத தாய் கலங்குகிருள். காரணத்தை அறியவிரும்பி அருகிலுள்ள முதிய பெண்டிரைக் கேட்கிருள். அவர்கள், 'இதுமுருகக் கடவுள் குறை' என்கிருர்கள். அதனை உண்மை என நம்பிய அந்தத் தாய், 'பலராலும் விருப்பி ஆராயப்பட்ட பாவை போன்ற அழகு, என் மகளுக்கு முன்புபோல் சிறந்து திரும்ப வரவேண்டும்' என்று வேண்டிக்கொண்டு முருகக் கடவுளையே அழைக்க முதலில் பூசாரியை வரவழைக்கிருள். பூசாரி வருகிருன். வாத்தியங்கள் வருகின்றன. களம் அமைக்கப்படுகிறது. பந்தல் போடப்படுகிறது. அதிலே முருகன் வெறியாட்டு!

தலைவனால் ஏற்படுத்தப்பட்ட இத்துன்பம் அவன் மார்பிலே படிவதனுல்தான் தீரும் என்பதை அறியாத தாய், இந்தவெறியாட்டுக்குஏற்பாடு செய்துவிட்டாள்.

இந்த நிலையில் தலைவி தோழியிடம் பேசுகிருள்:

"தோழி! அன்னை அறியாதவளாய் இந்த ஏற்பாட்டைச் செய்துவிட்டாள். இதனுல் 'முருகன் குறை' என்று சொல்லும் 'பொய்வல்' பெண்டிர் மொழிக்கு ஏற்றவாறு எனக்கு முருகன் அருளால் பழைய அழகு திரும்பி வரவேண்டும். அட்படி வரவில்லையானுல் நாம் மூடி மறைத்து வைத்துள்ள நம் 'களவொழுக்கம்' — தலைவனிடத்து நான் கொண்டுள்ள தொடர்பு—எல்லோருக்கும் தெரிந்துவிடும்! நம் மறை வெளியாகிவிடும்! அது இன்னும் இரகசியமாகவே இருப்பதென்பது அரிது!

அது மட்டுமல்ல. நம் தலைவர் தந்த மனநோயால் நாம் படும் அல்லலைக் கண்டு அருள் செய்து முருகவேள் நமக்கு அழகு திரும்புமாறு செய்துவிட்டான் என்று வை.

அப்போதும் என்னவாகும்?

'இப்படி நமக்கு அழகு திரும்ப வந்துவிட்டது' என்ற செய்தி நம் தலைவர் செவியிற் சென்று விழுந்து அதனை அவர் கேட்பாரானுல் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்?

'ஓகோ... இவளுக்கு நம்மைப் பிரிந்த ஏக்கத்தால் அழகு குறையவில்லை இவளுக்கு வந்த மெலிவு—துன்பம்—ஏக்கம் நம்மால் ஏற்பட்டதல்ல! நம் 'பிரிவால்' ஏற்பட்டிருந்தால் நம் 'உறவால்' தானே துன்பம் தீர வேண்டும்! நம் 'உறவு' இல்லாமலேயே இது தீர்ந்திருக்கிறதே...... ஆகையினுல் இது பிறிது! அது வேருென்று! நம் பிரிவால் வருந்தும் அன்புக்கு இவள் நம்மிடம் உண்மை அன்புடையவள் அல்லள்'—என்று நினைப்பார்.

அவர் அப்படி நினைத்தால்...பிறகு நான் உயிர்வாழ்வதே அரிதாகிவிடும்!

"அன்னை அறியாது செய்யும் இந்த வெறியாட்டால் தனக்கு அழகு திரும்பாவிட்டால் ஊர்ப் பெண்டிர் வாயில் அகப்படும் ஆபத்து! திரும்பினுல் தன் உயிருக்கே ஆபத்து" என்கிருள் தலைவி!

தன் தலைவனின் தொடர்பால்—அன்பால் மகிழ்ந்த மனம் இப்போது அது கிடைக்கப் பெருது சற்றே தடைப்பட்டதால் வருந்தியது. அவ்வருத்தத்தால் அழகு மெலிந்தது. எதனுல் மெலிந்ததோ அதனுலேயே திரும்பவும் அவ்வழகுசெழித்திடல் வேண்டுமே தவிர கடவுள் அருளால் திரும்பினுலும் அது தன் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் என்கிருள்.

காரணம்; 'தன்னிடத்து அன்பிலள்' எனத் தன் தலைவன் தன்னைப் பற்றிக் கருத அது இடம் அளித்திடும் என்ற நுண்ணுணர்வு, அவள் தன் அழகைப்பற்றி எண்ணும் எண்ணத்தில்எத்தனை அழகு! அழகிலும் அழகு!

எண்ணி எண்ணி வியக்கத்தக்க இந்நுண்ணுணர்வை வரும் வழிமுறையும் உணர்ந்து பின்பற்றுவோமாக!

அகநானூறு, களிற்றியானை நிரை.

அதுதான் காரணம்!

இந்தியாவினுடைய தலைநகரமான டில்லிப் பட்டணத்திலே ஏற்பட்டிருக்கின்ற தகராறு—உண்மையாகச் சொல்ல வேண்டுமானுல் அங்கே அதிகப்படியான அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பது தான் தகராறுக்கே உண்மையான காரணம்.

இந்த அதிகாரங்களையார் நிர்வகிப்பது? இவ்வளவு அதிகாரங்கள் இருக்கின்றனவே இந்திரா காந்தியே அதைத் தொடர்ந்து நிர்வகிப்பதா அல்லது மொரார்ஜி தேசாயினுடைய கைக்கு அதை மாற்றுவதா இதுதான், இன்றையத் தினம் டில்லி வட்டாரத்திலே நடைபெறுகின்ற போராட்டத்தின் சூட்சுமமாகும்!

—கடலூரில் முதலமைச்சர்,

கம்யூனிஸ்டுகளுக்குக் காணிக்கை

அன்புள்ள நண்பா!

28—10—69 'காஞ்சி' இதழில் "உணவுப் போராட்டமா இது?" என்ற தலைப்பில் கம்யூனிஸ்டுகளது உணவுப்போராட்டம்பற்றி உன் சிந்தனைக்குச் சிலவற்றைப் படைத்திருந்தேன். படித்திருப்பாய்; படித்தவற்றை மற்றையவர்களுக்கும் பகர்ந்திருப்பாய்! ஆனால் "ஜனசக்தி"க்கு மட்டும் கோபம் பொத்துக்கொண்டுவந்திருக்கிறதே, என்ன செய்ய?

வலது கம்யூனிஸ்டு கட்சி, கடந்த கிழமை 27—10—69ம் நாள், நாடெங்கும் முதல் கட்டமாக ஒரு போராட்டத்தை நடத்தி முடித்திருக்கிறது. அதாவது மக்களுக்குத் கட்டுப்பாடும் கட்டுப்பாடுமற்ற முறையில் உணவுப் பொருள் கிடைக்கச் செய்யும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் விதத்தில், பிரச்னையை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்குத்தான் இந்தப் போராட்டம் என்று அறிவிப்புக் கொடுத்ததுடன், அதன் கட்சித்தலைவர், ஏன் இந்தப் போராட்டம் என்பதை விளக்கி, ஒரு கட்டுரையும் எழுதி இருந்தார். அந்தக் கட்டுரை காட்டிய சில விவரங்களின் மீதுதான்,

உணவுப் போராட்டம் நடத்த,
இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு
ஏதாவது அருகதை இருக்கிறதா?

என்ற பொருளில் சில விவரங்களையும் உனக்குத் தெரிவித்திருந்தேன், 'காஞ்சி'யின் மூலம்.

இந்தக் காரணத்தாலேயே 'ஜனசக்தி'க்குக் கோபம் வந்துவிட்டிருக்கிறது. நாம், அவர்களை மிரட்டுவதாகக் கற்பனை செய்துகொண்டு

மிரட்டல்கள்,
அடக்குமுறைகள்,
துப்பாக்கிக் குண்டுகள்,
தூக்குமேடைகள்

எல்லாவற்றையும் சந்தித்துச் சந்தித்துப் போராடிப் போராடி உரமேறியவர்கள் கம்யூனிஸ்டுகள் — என்று தன் வரலாற்றைப் பற்றி நமக்கு நினைவுபடுத்தி இருக்கிறது 2—11—69 'ஜனசக்தி' இதழ்.

கம்யூனிஸ்டுகளைப் பார்த்து நாம் கேட்டதெல்லாம் தோழமை உணர்வுடன் ஒருவர்க்கொருவர் செயல்பட்டுக்கொண்டு வருகிறோமே ஐயா, இதனை அரசின் கவனத்துக்குக் கொண்டு வர இப்படி ஒரு போராட்டமா? என்றுதானே! அத்துடன்,

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட இந்த இரண்டரையாண்டுக் காலத்திலே, தமிழகத்திலே விவசாய உற்பத்திக்காகக் கழகம் மேற்கொண்டுள்ள முயற்சியினை அறியாமலிருக்கிறார்கள் என்று யாரால் நம்ப முடியும்?

என்றும் கேட்டிருந்தோமே;

வறட்சி நிலை ஏற்பட்டு விட்டது! வட புலமே! நிதி உதவி செய்! என்று குரல் கொடுத்தபோது கம்யூனிஸ்டுகளின் குரலும் சேர்ந்து ஒலிக்கவில்லையா? நிலை அறியாத காரணத்தாலா குரல் இணைந்து ஒலித்தது? நம்ப முடியுமா அப்படி?

என்றுங்கூட எடுத்துக் காட்டியிருக்கிறோம் கம்யூனிஸ்டுகளுக்கு. இதனையும் கூறிவிட்டு—

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இடதோ, வலதோ கம்யூனிஸ்டுகள் உற்பத்திக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டு வருவது என்பது தொடர்கதையாகவே ஆகிக்கொண்டிருக்கிறது—கூலி உயர்வின் பேரால்!

என்பதையும் விளக்கி இருக்கிறேன். ஆனால் நண்பா, ஜனசக்தியின் கட்டுரை ஆசிரியருக்கு இவைகள் புலப்படவில்லை. மாறாக—

கூலி உயர்வின் பேரால் குந்தகம் விளைவிக்கிறார்கள்.

என்ற வரிகள் மட்டுமே 'பளிச்'செனத் தெரிந்திருக்கிறது! ஆவேசங் கொண்டுவிட்டார். அடக்குமுறைகளையும், துப்பாக்கிக் குண்டுகளையும், தூக்கு மேடைகளையும் நினைவுபடுத்த வந்துவிட்டிருக்கிறார்.

நண்பா, ஒரு அரசியல் கட்சி என்கிறபோது, அந்தக் கட்சி நாட்டு மக்களது நலிவகற்ற வேண்டும் என்று மனதார நம்பி, செயல்பட முனையும்போது கட்டுரையாளர் குறிப்பிடும்

மிரட்டல்கள்
அடக்கு முறைகள்
துப்பாக்கிக் குண்டுகள்
தூக்குமேடைகள்

இவை யாவற்றையும் அடிக்கடிச் சந்தித்துச் சந்தித்துப் போராடிப் போராடி உரமேற்றிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும். எல்லா அரசியல் கட்சிகளுக்குமே பொதுவாகப் பொருந்தக்கூடிய நிலைமைகள் இவை.

கழக அரசு, விவசாயத் தொழிலாளர்களது கூலி உயர்வு பற்றி என்னென்ன செய்திருக்கிறது என்பது அறியாமலா கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள்? அல்லது கூலி உயர்வு தொழிலாளர்களுக்குக் கூடாது என்பதுதான் கழகத்தின் வாதமா?

> கூலி உயர்வுப் பிரச்னை என்பது இன்று, நேற்று, அல்லது கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் முளைவிட்டது அல்ல; காங்கிரசாட்சியின் தொடக்க காலத்திலேயே முளைத்துவிட்டது என்பது அனைவரும் அறிந்ததுதான்

என்ற விவரத்தையும் எடுத்துக் காட்டிவிட்டு அதன் தொடர்ச்சியாகவே,

> தொடக்க கால கூலி நிலை இன்றைக்கு இல்லை; தொடக்க கால சாகுபடி முறைமைகள் இன்றில்லாததைப் போலவே. ஆயினும் தேவைகளும். பிரச்னைகளும் பெருகிக் கொண்டே வருகிற சூழ்நிலையில் கூலி உயர்வுக்கும் ஒரு முடிவேற்பட்டுவிட முடியாது.

என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம் என்பதுகூடத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறதே, அது ஏன் கண்ணுக்குப் புலப்படாமல் போயிற்று?

> கம்யூனிஸ்டுகள் உற்பத்திக்குக் குந்தகம் விளைவிக்கிறார்கள்—கூலி உயர்வின் பேரால்

என்று நாம் சொல்லி இருப்பதை மறுக்க வீணான—சொத்தை வாதங்களைக் காட்டி இருக்கிறார் கட்டுரையாளர் என்பதல்லாமல் வேறு பொருள் என்ன?

> முற்போக்கு முறைச் சாகுபடி என்று டிராக்டர் போன்ற எந்திரக் கருவிகளைப் பயன்படுத்த வரும்போது, டிராக்டர் எதிர்ப்புப் போராட்டங்கள்

என்பதன் பேரால் உணவுப் பண்ட உற்பத்திக்குக் குந்தகம் விளைவிக்கிறார்கள் என்பது நமது முக்கியமான குற்றச்சாட்டு. கட்டுரையாளரது கவனத்தை இக் குற்றச்சாட்டு ஈர்த்துக் கொள்ளாமற் போனதிலே வியப்பில்லை. அதுபற்றி அவர் குறிப்பிட முடியாத பரிதாபத்துக்குரிய நிலையிலும் இருக்கிறார். ஏன்? கம்யூனிச ரஷ்யாவின் வரலாற்றில் ஒரு துளியைப் புரிந்து கொண்டால்கூட போதும், பதில் கிடைத்துவிடும்!

சோவியத் ரஷ்யாவின் விவசாயம், பெரும்பகுதியும் கூட்டுறவு முறையிலும் கூட்டுப் பண்ணை முறையிலும் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகும். அதாவது மகத்தான புரட்சி என்று மண்டில முழுதும் முழு மனதுடன் ஒப்புக்கொண்டிருக்கிற "அக்டோபர் புரட்சி"க்குப் பிறகு, லெனினது யோசனைகளின் பேரில், கட்டுரைகளின் பேரில், நூல்களின் அறிவுரைகளின் பேரில் செயல்படுத்தி மிகுதியும் வெற்றிகண்டுகொண்டுவருகிற விவசாய முறை அவைகள். நம் நாட்டில் அந்தநிலைமை தோன்றாவிட்டாலும், சாகுபடியும் உற்பத்தியும் மிகுதியாக வேண்டும் என்று இப்போது கழக அரசு கங்கணங் கட்டிக்கொண்டு செயலாற்றி வருகிறது. உற்பத்தி மிக வேண்டும் என்பதற்காக—

> விஞ்ஞான, தொழில் நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தி விவசாயத்தை சோஷலிச அடிப்படையில் ஒழுங்கமைக்கும் பொருட்டும், உழைப்பாளி மக்களிடையே சோஷலிச மனப்பாங்கு வேறூன்றும்படி அவர்களுக்குக் கல்வி அளிக்கும் பொருட்டும்...

—கம்யூனிஸ்டு கட்சி சில திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறது. விவசாய உற்பத்திப் பெருக விஞ்ஞான, தொழில் நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும் என்கிறது மேலே காட்டிய எடுத்துக் காட்டு. அத்துடன் கல்வி அறிவையும் ஊட்ட வேண்டும் என்கிறது.

இந்த எடுத்துக் காட்டு 1919-ல் ரஷ்ய அரசின் மத்திய நிர்வாகக் குழு பிறப்பித்த ஒரு சட்டத்தின் சில பகுதிகளேயாகும். அத்துடன் நண்பா, இந்த யோசனையும் திட்டமும் லெனின் அவர்களது முன்னிலையில், லெனினாலேயே வகுத்துக் தரப்பட்டதாகும் என்கிறார் ரஷ்ய எழுத்தாளர் பி. இக்னத்தோவ்ஸ்கி என்பவர்.

விவசாயப் பெருக்கத்துக்கு நவீன சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டது ஏன்?

> நவீன உழைப்புக் கருவிகள் விவசாயப் பொருள் உற்பத்தியை மட்டுமின்றி. உழுது பயிரிடும் விவசாயியையும் புரட்சிகரமான முறையில் மாற்றி யமைக்கும் ஆயுதமாகப் பயன்படக் கூடியவை.

—என்று லெனின் கண்டார்! அதனால் இந்த முறையிலேயே சாகுபடி நடைபெற வேண்டும் என்பதற்குச் சட்டம் கொண்டார்.

விஞ்ஞான, எந்திரக் கருவிகளை விவசாயத்துக்குப் பயன்படுத்த வேண்டும் என்று சட்டம் கொண்டு வர வேண்டிய காரணம் என்ன?

> சிறு நிலச் சாகுபடியாளரையும், அவருடைய மனோபாவத்தையும், பழக்க வழக்கங்களையும் மாற்றுவது சுலபமானதல்ல; பல தலைமுறைகளுக்குத் தொடர்ந்து பாடுபட்டு, செய்து முடிக்க வேண்டிய பணி இது. இதற்கு தக்கப் பொருளாதார அடித்தளமாக அமைவது இயந்திர சாதனங்களே

என்கிறார் லெனின். சாகுபடியும், உற்பத்தியும் துரிதமடைவதுடன் முன்னேற்றமுங் காண வேண்டுவது பிரதான அம்சம்; அத்துடன் உழவர் குடியும் உயர வேண்டும்; அதைச் செய்வன முற்போக்கு முறைச் சாகுபடிதான், முற்போக்கடையச் செய்வன டிராக்டர் போன்ற எந்திரங்களும், உழு கருவி போன்ற எந்திரங்களுமே என்பது லெனினது திட்டவட்டமான தீர்ப்பு.

சோவியத் ரஷ்யாவின் 5 ஆண்டுத் திட்டங்களில் பிரதான இடத்தை உழு தொழிலுக்கு ஒதுக்கி. அத் தொழிலில் எந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்கமுங் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது—என்பது முன்னே கூறிய ரஷ்ய எழுத்தாளர் நமக்கும் நாட்டுக்கும் எடுத்துக் காட்டுவதாகும்.

> விவசாயத் துறையில் இயந்திரங்களை விரிவான அளவில் உபயோகத்துக்குக் கொண்டு வருவதானது, ஓரளவு உழைப்பாளனும், ஓரளவு உடைமையாளனுமாக இருக்கும் நடுத்தர விவசாயியின் சமூக இயல்பை மாற்றியமைப்பதற்கும், சிறிய அளவிலான உற்பத்தியைப் பெருவீத உற்பத்தி யாக்குவதற்கும் ஒரு சிறந்த வழியாகும்

என்பது லெனினது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இந்த அசைக்க முடியாத நம்பிக்கைதான் உழு தொழிலில் எந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற சட்டத்தையே: ஏற்படுத்தி இருக்கிறதல்லவா நண்பா!

இந்தியத் துணைக்கண்டம்கூட வேண்டாம்; தமிழ் நாட்டிலேயே உழவுத் தொழிலை மிகுதியும் நம்பிக் கொண்டு வாழ்வோரும், அந்த உழவர் பெருமக்களை நம்பி வாழ்வோரும்தான் அதிகம்! சோவியத் ருஷ்யாவைப் போலவே!!

அப்படியானால் அந்த உழவர் குடியும், அவர்களது உற்பத்தியும் மிகுதிப்படுத்தப்பட வேண்டுமல்லவா?

பழங்கால சாகுபடி முறைமைகளினால் உழவன் போதிய வருமானமின்றிச் சங்கடப்பட நேர்ந்தபொழுது, வாழ்க்கைப் போக்கினைச் சமாளிக்க வேறு துணை வேலைகளில் ஈடுபட நேர்ந்தது—ரஷ்ய விவசாயிகளுக்கு!

தமிழகத்தில் அந்நிலை யுண்டா? துணைத் தொழில்களில் விவசாயப் பெருங்குடியினரை ஈடுபடச் செய்யும் விதமாக, "விவசாயிகளின் உயர்வுக்கு" என்று நாப்பறை தட்டுவோர் செயல்பட்டிருக்கிறார்களா?

நண்பா, லெனினின் கொள்கைப்படி விவசாயம் எந்திரமயமாக்கப்பட வேண்டும் என்று கொள்கை வகுத்துக்கொண்டபோது, ரஷ்யக் கம்யூனிஸ்டுகள் என்ன செய்தார்கள்? எந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது; அதனால் ஏழை உழவனுக்கு வேலை கிடைக்காது போய்விடும் என்ற பிரசாரத்திலீடுபட்டார்களா? மறியலிலிறங்கினார்களா? இல்லையே! மாறாக—

> கம்யூனிஸ்டுகள் பலரும் கிராமப் பகுதிகளுக்குச் சென்று, இந்த இயந்திரங்களை உபயோகித்துக் கொளவதறகான முறைகளை விளக்கிக் கூறியும், வேலைகளை ஒழுங்கமைத்துக் கொடுத்தும விவசாயிகளிடையே பணியாற்றினர்!

ரஷ்யக் கம்யூனிஸ்டுகள், விவசாய உற்பத்திப் பெருக வேண்டும் என்பதற்காக விவசாயிகளுக்கிடையே சென்று வேலை முறைகளைக் கற்றுத்தந்தார்கள்! இயந்திரங்களை இயக்கிக்காட்டினார்கள்! தமிழகத்தில் நடந்ததென்ன?

உற்பத்திக்குக் குந்தகம் விளைவிப்பது கம்யூனிஸ்டுகள்தான் என்பதை விளக்க,

> முற்போக்கு முறைச் சாகுபடி என்று, டிராக்டர் போன்ற எந்திரக் கருவிகளைப் பயன்படுத்த வரும்போது "டிராக்டர் எதிர்ப்பு"ப் போராட்டங்கள் என்பதன் பேரால் குந்தகம்

என்று எடுத்துக்காட்டி இருந்தோமே, பதில் எங்கே? ஜனசக்திக் கட்டுரையாளரது கண்களுக்கு இது படாததில் வியப்புண்டா நண்பா?

ரஷ்யக் கட்டுரையாளர் மற்றொன்றையும் விளக்குகிறார். கம்யூனிசத்தை எதிர்ப்போர் முக்கியத்துவம் கொடுத்து இன்றைக்கும் பேசிக்கொண்டு வருவதுதான் அது.

> துவக்கநாட்களில் கடுமையானசிலதவறுகள் இழைக்கப்பட்டன; கூட்டுடைமை இயக்கம் செயற்கை முறையில் துரிதப்படுததப்பட்டது. ஆனால் கட்சி, தக்க காலத்திலேயே தவறுகளைத் திருத்திக்கொண்டது.

புரட்சிக் கொள்கைகளைச் செயல் படுத்தியதிலே கூட சில தவறுகள் நிகழ்ந்தனவாம்! எப்படிச் செயல்படுத்தினார்கள்?

செயற்கை முறையில் துரிதப்படுத்தப்பட்டது! இந்தத் துரிதத்தின் விளைவு என்ன?

> கடுமையான சில தவறுகள் இழைக்கப்பட்டன.

எனவே நண்பா, சோவியத் ரஷ்யாவின் விவசாயக் கொள்கையில்கூட சில தவறுகள் நேரத்தான் செய்தன! நல்லவைதான நடக்கும் என்று நம்பப்பட்டு செயல்படுத்திய முறைகளால் ஏற்பட்ட சில தவறுகள், கடுமையான விளைவுகளை உண்டாக்கின. அதாவது, கூட்டுப்பண்ணை முறைக்கே சாவு மணியடித்துவிடவேண்டிய அளவுக்கு விவசாயக் குடும்பங்களது எதிர்ப்பு ஏற்பட்டுவிட்டது. எனவே, பின்விளைவுகளுக்குப்பின், தவறுகளைத் திருத்திக்கொண்டது ரஷ்யா! எத்தனை ஆண்டு காலத்துக்குப்பின் திருத்திக்கொண்டது என்பது கிடக்கட்டும். தவறுகளும் நேர்ந்தன! என்பது குறிப்பிடத்தக்கதல்லவா!

அந்தத் தவறுகள் விவசாய உற்பத்தியைப் பாதித்தன! எனவே களைந்துகொண்டன.

இங்கே, நம் நாட்டில் உற்பத்திக் கெட்டால் என்ன? உழுதொழில் கெட்டாலென்ன?

> டிராக்டர்களைப் பயன்படுத்தக்கூடாது. பயன்படுத்தினால் எதிர்த்து ஒரு போராட்டம் நடத்துவார்கள்!

கூலி உயர்வுபற்றி முன்பே குறிப்பிட்டேன் நண்பா! மாறுபாடடைந்துள்ள நிலைமையையும் எடுத்துக்காட்டினேன்! உயர்ந்துகொண்டே வருவது தவிர்க்க முடியாதது என்பதையும் ஒப்புக்கொண்டே, எடுத்துக்காட்டியுள்ளேன். என்றாலும், கூலித்தகராறு காரணமாக சாகுபடி வேலைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தவில்லையென்று கம்யூனிஸ்டுகள் மறுக்க முன்வருவது வியப்பாயிருக்கிறதல்லவா!

கூலித் தகராறு காரணமாகவும் உற்பத்திக்குக்கேடு ஏன்பது—கூலித்தகராறு காரணமாகவே உற்பத்திக்குக் கேடு என்று எப்படிப் பொருள்படும் என்பதை ஜனசக்தி கட்டுரையாளர்தான் விளக்கவேண்டும். டிராக்டர் எதிர்ப்பினாலும் கேடுண்டாகிறது. உற்பத்தியைப் பாதிக்கிறது. விவசாய முன்னேற்றத்தைத் தடுக்கிறது என்பதை ஏன் ஒப்புக்கொள்ள முடியவில்லை, கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு!

டிராக்டர் எதிர்ப்பு நடத்தியது இடதானாலும் வலதானாலும் தவறு, தவறுதான். ஏனென்றால் 'ஜனசக்தி' நமக்குப் பதில் தந்த அதே இதழிலேயே வேறோர் இடத்தில்,

> கம்யூனிஸ்டுகளிடையே நடைமுறையில்தான் பிளவுகள் இருக்கின்றனவேயொழிய, முதலாளிக்கும் தொழிலாளிக்கும் நடுவில் ஒரு சமரச நடுவழி எந்தக் கம்யூனிஸ்டுக்கும் கிடையாது.

என்று குறிப்பிட்டிருக்கிறது. அதாவது கம்யூனிஸ்டு கட்சி எத்தனையாகப் பிளவுண்டிருந்தாலும் கொள்கைப் பிளவு அல்லது கொள்கை வேறுபாடு என்பது கிடையாது என்று பொருளாகிறது. எனவே, இயந்திரங்கள் மூலம் சாகுபடி செய்தல் என்ற பொதுக்கொள்கை வலதுக்கும் இடதுக்கும் பொருந்துவதாகும். எனவே இந்த எதிர்ப்பின் மூலம் உற்பத்திக்குக் கேடுண்டாக்கியது கம்யூனிஸ்டுதான். கேடுண்டாக்க நினைத்ததும், முயன்றதும் கம்யூனிஸ்டுக் கட்சிதான்!

இதனை எடுத்துக்காட்ட முனைவது காங்கிரசுக்கோ, சுதந்திராவுக்தகா உயிர்கொடுப்பதாக எப்படியாகுமோ தெரியவில்லை. ஒருகால் இப்போது காமராசருக்கும், நெடுநாட்களாகவே சுதந்திராவுக்கும் கடும்பகையேற்பட்டிருப்பது காரணமாக இருக்குமோ என்னவோ! யார் கண்டார்கள் நண்பா!

ரஷ்ய நாட்டின் 1965ம் ஆண்டு நிலையைக் கொஞ்சம் கவனித்துப் பார்ப்போம் அடுத்த கிழமை.

அன்புள்ள,

திருவாரூர், முத்துராமன்.

சென்னை
சித்ரா-ஸ்ரீ கிருஷ்ணா
சரவணா-ஸ்ரீநிவாசா
மற்றும்
தமிழ் நாடெங்கும்

B. நாகி ரெட்டி அளிக்கும்
'புரட்சிநடிகர்' எம். ஜி. ஆர். நடிக்கும்
விஜயா இண்டர்நேஷனலின்

நம் நாடு

ஈஸ்ட்மன் கலர்

டைரக்ஷன் ஜம்பு
இசை எம். எஸ். விஸ்வநாதன்
வசனம்: சொர்ணம்
பாடல்கள் வாலி

...சிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
... வெளியிடப்படுகிறது.